DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 140 of 2016

Preliminary Register

Sessions

Deposition of Witness for PW4

Name : திரு.குற்றாலிங்கம்

Age : 64

Father's/Husband's Name : வேலு

Village : வடுகபாளையம்

Taluk : பல்லடம்

Occupation : லோடுமேன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of December 2022.

முதல் விசாரணை: நாள்: 14.12.2022

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு லோடுமேனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2015ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை, நான் வேலை செய்யும் செந்தில் வே பிரிட்ஜ் அருகில் கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று அருகில் சென்று பார்த்தபோது முந்தைய நாள் நடந்த விபத்து சம்மந்தமாக மாலை 6.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை

மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

என்னிடம் மாலையில்தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில்தான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் கையால் எழுதப்பட்டிருந்தது. டைப் செய்யப்படவில்லை. உண்மையில் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2022.12.02 17:49:15 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்